# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


ஆணை நாள் 03.06.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 15068/B/2023**

திரு.M.இளங்கோவன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/முதல்வர் — பொது அதிகார அமைப்பு
அரசினர் பொறியியல் கல்லூரி,
ஸ்ரீரங்கம், சேதுராப்பட்டி,
திருச்சி - 620012.

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (03.06.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.M.இளங்கோவன் அவர்கள் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, முனைவர்.ஜெ.செல்வின் ராஜதுரை, இணைப்பேராசிரியர், அரசினர் பொறியியல் கல்லூரி, ஸ்ரீரங்கம், அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 22.08.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (03.06.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 05.06.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், அரசினர் பொறியியல் கல்லூரி,ஸ்ரீரங்கத்தில் இதுவரை நடத்தப்பட்ட ATAL FDT மற்றும் ATAL போன்ற FDP-யின் மூலம் முதல்வர் மற்றும் முதல்வர் அலுவலகத்தில் பணிபுரியவர்களுக்கு அளிக்கப்பட்ட தொகை, தொகையை பெற்ற நபர் மற்றும் தொகை அளிக்கப்பட்ட நாள் ஆகிய தகவல்களை வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 13.07.2023 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் இவ்வழக்கில் கோரிய தகவல்கள் தொடர்பாகவே ஏற்கனவே இக்கல்லூரி முதல்வரிடம் கோரி, தகவல்கள் பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், மீண்டும் மீண்டும் அதே தகவல்களை கோரி மனு தாக்கல் செய்வதால், ஒரே பொருள் குறித்து திரும்ப திரும்ப தகவல் கோரினால் அதனை நிராகரிக்கலாம் என 27.06.2023 மற்றும் 11.08.2023 ஆகிய தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைத்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின்

முன்பு சமர்ப்பித்தார். மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகாத நிலையில், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரருக்கு ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் விசாரணையின் போது தெரிவித்திருந்தும், அதுகுறித்த எவ்வித ஆவணங்களையும் ஆணையத்தின் முன்பு சமர்ப்பிக்கவில்லை. ஆகவே, மனுதாரருக்கு மேற்படி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பது உறுதிசெய்யப்படாத நிலையில், கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது:-

- ***பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள், மனுதாரர் கோரிய தகவல்களை சட்டப்பிரிவு 7(6)ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி, மனுதாரர் அதனை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.***

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15086/B/2023</u>**
**<u>பெறுநர்</u>**
பொதுத் தகவல் அலுவலர்/முதல்வர்,
அரசினர் பொறியியல் கல்லூரி,
ஸ்ரீரங்கம், சேதுராப்பட்டி,
திருச்சி - 620012.

திரு.M.இளங்கோவன்,
2/688, மின்னனு மற்றும் தொடர்பியல் துறை,
அரசினர் பொறியியல் கல்லூரி, ஸ்ரீரங்கம்,
சேதுராப்பட்டி,
திருச்சிராப்பள்ளி - 620 012.

Copy to: File
Sj/Ps- 12/06/2026

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005